**கூடுதல் மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், ஜெயங்கொண்டம்.**

முன்னிலை: **திரு.S.கணேஷ், எம்.காம்., எம்.எல்.,**
கூடுதல் மாவட்ட உரிமையியல் நீதிபதி,
ஜெயங்கொண்டம்

**2023 ஆம் ஆண்டு நவம்பர் திங்கள் 27–ஆம் நாள் திங்கட்கிழமை**
**அசல் வழக்கு எண் – 84/2017**
**CNR No:TNAL050001082017**

திருமுருகன் குடும்ப மேனேஜர் என்ற கோதாவில். – வாதி

/எதிர்/

1) கோவிந்தராஜ்
2) இலட்சுமிகாந்தன்
3) மகேந்திரன்
4) குண்டு பாலு (எ) பாலு
5) சிவா
6) சார்பதிவாளர், தா–பழூர் – பிரதிவாதிகள்

தாவா சொத்தில் வாதியின் உரிமையை விளம்புகை செய்து, அதன் தொடர் பரிகாரமாக, தாவா சொத்தில் வாதியின் அனுபவத்தில், 1 முதல் 5 பிரதிவாதிகளோ, அவர்களது ஆட்களோ அல்லது ஏஜெண்டுகளோ, எவ்விதத்திலும் இடைஞ்சல் செய்யாதிருக்க பிரதிவாதிகளுக்கு எதிராக நிரந்தர உறுத்துக்கட்டளை பரிகாரம் வழங்கி தீர்ப்பு செய்தும், தாவா சொத்தினை 1 முதல் 3 பிரதிவாதிகள் 4, 5 பிரதிவாதிகளுக்கோ, வேறு நபர்களுக்கோ வில்லங்க ஆதரவு ஏற்படுத்தும் பட்சத்தில் அதனை 6ம் பிரதிவாதி பதிவு செய்யாதிருக்க வேண்டி பிரதிவாதிகளுக்கு எதிராக நிரந்தர உறுத்துக்கட்டளை பரிகாரம் வழங்கியும், தாவா செலவுத்தொகை வாதிக்கு பிரதிவாதிகளிடம் இருந்து கிடைக்கவும், இன்னும் சமூகம் கோர்ட்டாரவர்களுக்கு தம்யுத்தமாக தோன்றும் இதர நியாய பரிகாரங்கள் வழங்கியும் தீர்ப்பு செய்ய வேண்டுமாய் வாதி தரப்பில் பிரார்த்திக்கப்படுகிறது.

இவ்வழக்கானது 27.11.2023–அன்று என் முன்பாக இறுதியாக விசாரணைக்கு வந்ததில், வாதி தரப்பில் வழக்கறிஞர் திரு.R.சுரேஷ்குமார் அவர்கள் முன்னிலையாகியும், 1 முதல் 5 பிரதிவாதிகள் தோன்றாதரப்பினராக கருதப்பட்டும், 6வது பிரதிவாதி தரப்பில் அரசு தரப்பு வழக்கறிஞர் அவர்கள் முன்னிலையாகியும், வழக்கு கோப்பு ஆவணங்களை பரிசீலித்தும், இன்று இந்நீதிமன்றம் பிறப்பிக்கும்...

## தீர்ப்புரை

வாதி அழைத்தும் ஆஜரில்லை. வாதி தரப்பு வழக்கறிஞர் ஆஜர். இந்த வாய்தா மற்றும் கடந்த வாய்தாக்களில் இவ்வழக்கு சிறப்பு பட்டியல் விசாரணைக்காக பட்டியலிடப்பட்ட நிலையில் வாதி அழைத்தும் ஆஜரில்லை. இந்நிலையில் வாதியின் வருகை அவசியமாகிறது. இவ்வழக்கு நீண்டநாட்களாக நிலுவையில் இருக்கும் வழக்குகளின் கீழ் வருகிறது. எனவே நீதியின் நலன் கருதி இவ்வழக்கு தள்ளுபடி செய்து உத்தரவிடப்படுகிறது.

இவ்வுத்தரவு என்னால் நேரடியாக தட்டச்சருக்கு சொல்லப்பட்டு அவரால் தட்டச்சு செய்யப்பட்டு என்னால் பிழைத்திருத்தம் செய்யப்பட்டு, 2023–ஆம் ஆண்டு நவம்பர் திங்கள் 27–ஆம் நாள் இன்று இந்நீதிமன்றத்தில் என்னால் அவையறிய பகரப்பட்டது.

ஒப்பம்/–திரு.S.கணேஷ், எம்.காம்., எம்.எல்.,
கூடுதல் மாவட்ட உரிமையியல் நீதிபதி,
ஜெயங்கொண்டம்.

**வாதி தரப்பில் சாட்சிகள் மற்றும் சான்றாவணங்கள்:**

–இல்லை–

**பிரதிவாதிகள் தரப்பில் சாட்சிகள் மற்றும் சான்றாவணங்கள்:**

–இல்லை–

ஒப்பம்/–திரு.S.கணேஷ், எம்.காம்., எம்.எல்.,
கூடுதல் மாவட்ட உரிமையியல் நீதிபதி,
ஜெயங்கொண்டம்.

----------------------------

கூடுதல் மாவட்ட உரிமையியல்
நீதிமன்றம், ஜெயங்கொண்டம்
அசல் வழக்கு எண்.84/2017
தீர்ப்புரை (நேரிய/வரைவு)
நாள்: 27.11.2023,

----------------------------